செய்தி வெளியீடு **நாள் : 30.6.2025**

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் சென்னை, வால்டாக்ஸ் சாலையில் நடைபெற்று வரும் ஒருங்கிணைந்த வளாகம் பணிகளை துரிதபடுத்தும் வகையில் மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் சென்று ஆய்வு செய்து, அனைத்து பணிகளையும் விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார்.

****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி இன்று (30.6.2025) சென்னை, வால்டாக்ஸ் சாலை, தண்ணீர் தொட்டி தெருவில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் கட்டப்பட்டு வரும் புதிய இரத்த சுத்திகரிப்பு மையம் (Kondithoppe Dialysis Centre), 700 புதிய குடியிருப்புகள் (700 Housing Tenements), புதிய சமூக நலக்கூடம் (Community Hall) மற்றும் விளையாட்டுத் திடல் (Play Ground) மேம்படுத்துதல் என **"ஒருங்கிணைந்த வளாகம்"** பணிகளை துரிதபடுத்தும் வகையில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** நேரில் சென்று ஆய்வு செய்து, **பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார்.**

இந்த ஆய்வுகளின்போது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., முதன்மை செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப. மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., மண்டலக் குழுத்தலைவர் திரு.பி.ஸ்ரீராமுலு, சி.எம்.டி.ஏ. தலைமை திட்ட அமைப்பாளர் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, தலைமை பொறியாளர் திரு.மகாவிஷ்ணு, கண்காணிப்பு பொறியாளர்கள் திரு.ராஜமகேஷ்குமார், திரு.பாலமுருகன், செயற்பொறியாளர் திரு.ராஜன்பாபு, மாமன்ற உறுப்பினர் திரு.ராஜேஷ் ஜெயின், பல்வேறு துறை அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

Verified @ RealEstate ™